# சிலுவைப்பாதை

## முன்னுரை

பரமன் பயணித்த பாடுகளின் பாதை. கற்களும் முட்களும் பாதங்களைப் பதம் பார்க்க, பாவிகளாகிய நம்முடைய பாவத்தைச் சிலுவையாய்ச் சுமந்து, அந்த சிலுவையிலேயே தன் இன்னுயிரைத் துறந்து பாவக்கழுவாய் செய்யப் பயணிக்கிறார் பரமன் இயேசு

நவீன கலாச்சாரத்தில் தளர்ந்து, துவண்டு, சோர்ந்து போய் உள்ள இளைஞர்களை தட்டிக்கொடுத்து, நம்பிக்கையூட்டி, இறைவன் விடுக்கும் அழைப்பினைத் தெளிந்து, தேர்ந்து, பதில்மொழி நல்குவதற்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த 2020ஆம் ஆண்டை இளைஞர் ஆண்டாக அறிவித்து, 'ஆற்றலோடு மாற்றம் நோக்கி..' பயணிக்க அழைக்கின்றார்.

இன்றைய இளைஞர்கள் கடந்தகால குழந்தைகள்; நிகழ்கால ஒளிரும் விண்மீன்கள்; எதிர்கால வல்லரசை உருவாக்கும் சிற்பிகள். இறையாட்சி இத்தகையோருக்கே உரியது என்று சிறு பிள்ளைகளை அரவணைத்த இயேசுவின் பாடுகளைத் தியானித்து, அவரோடு பயணித்து, பாவக்கழுவாய் செய்யத் துடிக்கும் பரமனோடு, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, பாடுகளோடு நம் வாழ்வையும் இணைத்து, நினைந்து, முறைப்படுத்த முயல்வோம்.

வேறுபாடுகளை மறந்து, கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் அனைவரும் ஒன்றே என்ற மனநிலையோடு கிறிஸ்துவின் மதிப்பீடுகளை வாழ்வாக்க பயணிப்போம். வருக இளைய சமுதாயமே!

பெற்றோரே! பெரியோரே! இறை இயேசுவின் அடிச்சுவட்டில் நாங்கள் வழிநடக்க இயேசுவின் பாடுகளின் பாதையில் பயணிக்கும் எங்களோடு வழிநடந்து வர உங்களையும் யாம் அழைக்கின்றோம். வருவீர்!

## முதல்நிலை

## இயேசுவைச் சிலுவை சாவுக்குத் தீர்ப்பிடுகின்றார்கள்

## தவறான தீர்ப்பும் தாமதமான தீர்ப்பும் அநீதியே!

### இறைவார்த்தை

சபை உரையாளர் 11:9 இளையோரே! நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.

### சிந்தனை

கற்றூணில் அடிபட்டு, முள்முடி சூட்டப்பட்டு, கசையால் வதைக்கப்பட்டு, வசை மொழிகளால் காயப்படுத்தப்பட்டு, குற்றவாளியாய் கொடூரர்களின் மன்றத்திலே இயேசு நிற்கின்றார். வதைப்போரின் கூட்டம் சூழ்ந்து நிற்க, இறைத்திருவுளம் ஏற்று வந்தவருக்கு மரணத் தீர்ப்பு வாசிக்கப் படுகின்றது. கலகத்தில் ஈடுபட்ட கள்வன் விடுதலை பெறுகின்றான். நீதியை நிலைநாட்ட வந்தவர் தண்டனை பெறுகின்றார். ஆட்சி கைநழுவிப் போய் விடுமோ என அஞ்சி கைகழுவுகின்றான் பிலாத்து.

கண்முன்னே எத்தனையோ தீர்ப்புகளை நாளும் காண்கின்றோம். சில ஆண்டுகளுக்கு முன்னர் பெண்ணின் கற்பைச் சூறையாடிக் கொலை செய்த காம கொடூர்களுக்கு தாமதமாக வழங்கப்பட்ட இந்த தீர்ப்பினை அநீதி என்று அறிந்திருந்தும், சமூக வலைதளங்களில் மட்டும் உள்ளக் குமுறலைக் கொட்டி, அதை நூறு பேருக்கு பகிர்வதில் மட்டும் ஆர்வம் கொள்ளும் நாம் இதற்கு மேலாகச் செய்துவிடுவது என்ன?

தவறான தீர்ப்பு என்று அறிந்தும் அநீதிக்குத் துணை போன கோழைப் பிலாத்து தானே நாமும்? அநீதிகளைக் கண்டும் காணாமல், வாய் மூடிச் செல்லும் நாம் துணிந்து எழுந்து நீதியின் கதிரவனாய் ஒளிர்வது எப்போது?

### செபம்

நீதியின் கதிரவனே! தவறானத் தீர்ப்புகளைக் கண்டும் காணாமல், அடுத்தவரைத் தீர்ப்பிட்டுக் கடந்து செல்லும் எம் மனநிலையை மாற்றி, நீதியின் பாதையில் பயணிக்க வரம் தாரும். - ஆமென்

## இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள் மேல் சிலுவை சுமத்தப்படுகின்றது

### சுமை தாங்கும் எளியவனாய் மாறுவாயா?

### இறைவார்த்தை

கலாத்தியர் 6:2 ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்.

### சிந்தனை

தீமை செய்த குற்றவாளிகளுக்குக் கிடைத்த சிலுவை, பாவிகளை மீட்க வந்த மீட்பரின் தோளில் சுமத்தப்படுகிறது. கள்ளங்கபடமில்லா மாசற்ற செம்மறியைப் பலியாக்க, சிலுவையைச் சுமக்க செய்தது நயவஞ்சக கூட்டம். சுமை சுமந்து சோர்ந்திருப்போரை இரு கை விரித்து அழைத்த கைகள் சிலுவையை அணைக்கிறது.

கருவில், தோளில் சுமந்து, இறுதி வரை இதயத்தில் வைத்துச் சுமக்கும் பெற்றோரை, அவர்களுடைய தள்ளாடும் வயதில் தடுமாற வைக்கும் கொடுமையைப் பற்றி சிந்திப்போமா? எதிர்காலத்தில் நமக்கும் இப்படி ஒரு நிலைமை வராமலா போகும்?

அன்புநிறை பெற்றோரே! அனுபவப் பாட ஆசிரியர்களான மூத்தவர்களை மதித்து, அவர்களின் வழிகாட்டுதலை ஏற்று வாழ, உங்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுங்கள். மூத்தவர்கள் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என தூரம் வீசி எறிய நினைக்காதீர்கள்.

இளையோரே! தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் நமக்காகத் தந்து, தம் இளமையை மறந்த பெற்றோரை அவர்களின் முதிர்வயதில் தோளிலும் இதயத்திலும் சுமப்பது நம் கடமை என்பதை உணர்வோமா? இது பாரமாக அழுத்தும் சுமை அல்ல; அன்பினால் அரவணைக்க செய்யும் சுகம் தரும் எளிய சுமையே என்பதை ஏற்றுக்கொண்டு பயணிப்போம்.

### செபம்

பாரமானச் சிலுவையை சுமந்த இறைவா! நாங்கள் எங்களோடு வாழ்பவர்களின் சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் சுமைதாங்கியாய் வாழ அருள்புரியும். - ஆமென்

## மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை கீழே விழுகின்றார்

## சறுக்கல்களே சாதனையின் படிக்கல்

### இறைவார்த்தை

நீதிமொழிகள் 24:16 நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்.

### சிந்தனை

கல்வாரி மலை நோக்கிய பயணத்தில் பாரம் தாங்காது முதல் முறை கீழே விழுகிறார் இயேசு. விழுந்தவரை எழுப்ப கரம் நீட்டாது கசையால் அடித்து வதைக்கின்றது படைவீரர் கூட்டம். இரத்தம் சொட்டச் சொட்ட, விழுந்தவர் எழுந்து நடக்க முயல்கின்றார். சறுக்கல்களைத் தடைக்கற்களாக கருதாமல், படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்து பயணிக்கின்றார் இயேசு.

இளையோரே! நாம் வாழும் இந்த சமூகம் பல காலமாக வீழ்ந்தே கிடக்கின்றது. அறிந்தும் அதைக் கண்டுகொள்ளாமல் கடந்து செல்கின்றோமே?

சாதி வெறி, மத வெறி, கொள்கை வெறி, பிரித்தாளும் மனப்பான்மை, கட்சி மனப்பான்மை, அடிமைத்தனம், தீண்டாமை, பாலினப் பாகுபாடு போன்றவற்றினால் சமூகம் சறுக்கல்களை சந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

வாழும் ஒரே கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம், கிறிஸ்தவ மதிப்பீடுகளைத் துறந்து, மனிதத்தை மறந்து, சகோதரத்துவத்தினை மதிக்காது, ஆலயச் செயல்பாடுகளிலும் சாதியை முன்னிறுத்துவது எந்த விதத்தில் நியாயமாகும்? தன்னையே உணவாகக் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுக்கும் கிறிஸ்துவை பிளவுபடுத்திப் பார்க்கும் மனநிலை மறைய வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் தான் பிளவுபட்டுள்ளோம் என்ற உண்மையை உணர்ந்து, சாதியச் சுமையால் சரிந்து கிடக்கும் சமுதாயத்தை தூக்கி நிறுத்த முயல்வோம்.

### செபம்

தன்னையே உணவாக தந்த எம் இறைவா! ஒரே திரு அவையின் உறுப்பினர்கள் நாங்கள் என்பதை உணர்ந்து, பிளவுபடா மனநிலையோடு வீழ்ச்சிகளில் எழுச்சி காண வரமருளும் - ஆமென்.

## நான்காம் நிலை

## இயேசு தன் தாயைச் சந்திக்கின்றார்

## சந்திப்பு - உறவின் சங்கமம்

### இறைவார்த்தை

திருப்பாடல் 85:10 பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்.

### சிந்தனை

இறை திருவுளம் நிறைவேற்ற மகன் நடக்கும் பாதையில், மகனை தொடர்ந்து பயணிக்குமாறு ஊக்கப்படுத்த சந்திக்கின்றார் அன்னைமரியா. மகனின்

பாடுகளின் பொருட்டு உள்ளத்தில் வாள் ஊடுருவ, கண்ணீர் தோய்ந்த முகத்தோடு மகனைச் சந்திக்கின்றார். உயிர் பிரியும் நேரத்திலும் உடனிருக்கும் உன்னதமான உறவாக ஓடி வருகின்றார். கருவுற்ற நாள் முதல் கண்ணின் மணி போல காத்து வந்த அன்பு மகனின் கண்கள், வடியும் இரத்தத்தினாலும், படைவீரர்களின் உமிழ்நீரினாலும் மறைக்கப்பட்டதை வேதனையோடு நோக்குகின்றாள். தளர்ச்சியிலும் தன்னைச் சந்திக்க வந்த அன்னையை ஏறெடுத்து பார்க்கின்றார் இயேசு.

சந்திப்புகள் சலித்துப்போன காலம் இது. தொலைவில் இருக்கும் நபரை வெகு சுலபமாக நேரில் பார்க்க வைக்கும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி, அண்டை வீட்டாரையும் சந்திக்க விடாமல் செய்கின்றது. காலையில் எழுந்தது முதல் இரவு உறங்க செல்லும் வரை வீட்டிற்குள்ளேயே பல விஷயங்கள் தகவல்களாகவே பரிமாறப்படுகின்றன.

கிறிஸ்தவக் குடும்பங்களில், மாலை வேளையில் குடும்பமாக ஒன்றிணைந்து, ஜெபமாலை சொல்லி, பின்னர் ஒன்றாக அமர்ந்து, இரவு உணவை ருசித்த வழக்கம் இன்று காணாமலே போய்விட்டது. அந்த மாலை நேரச் சந்திப்பில் வளர்ந்த அன்பும் உறவும் இன்றைய தகவல் பரிமாற்றங்களால் கிடைத்துவிடவாப் போகிறது? சந்திப்புகள் சண்டைகளின் பிறப்பிடம் அல்ல; அது உறவின் சங்கமம். சந்திப்புகளினாலேயே உறவுகள் உயிர் பெறுகின்றது. உணர்ந்து மாற்ற முயல்வோமாக?

### செபம்

உறவின் உன்னதமே! எங்கள் சந்திப்புகள் மற்றவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி, உறவுகளின் உன்னதத்தை உணரச் செய்ய வரமருளும். - ஆமென்.

## ஐந்தாம் நிலை

# இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவி செய்கின்றார்

## உதவிகள் உயர்வானவையே!

### இறைவார்த்தை

எசாயா 1:17 நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம் பெண்ணுக்காக வழக்காடுங்கள்.

### சிந்தனை

இயேசுவைக் கூட்டிச் செல்லும் படைவீரர்களுக்குத் தான் அவர் மீது எவ்வளவு கரிசனை? சிலுவைச் சாவு என்பது இல்லாமல் போய் விடுமோ? என்ற அச்சத்தால் வயல்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த சீமோனை சிலுவையைச் சுமக்கப் பணிக்கின்றனர். கட்டாயப்படுத்தப்பட்டாலும் இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கின்றார். காயங்களில் மறைந்த கண்களோடு பயணிக்கும் இயேசுவின் ஒளி நிறைந்த பார்வையால், புத்தெழுச்சியோடு சிலுவை சுமக்க துணிகின்றார் சீமோன்.

ஒவ்வொரு நாளும் நாம் பயணிக்கும் பாதையில் எத்தனையோ வறியவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் காண்கின்றோம். அவர்களின் துயர் துடைக்க முற்பட்டு இருக்கின்றோமா? உணவுக்காகவும் காசுக்காகவும் கையேந்தி வரும் மனிதர்களிடம் உங்களுக்கு என்ன குறை? உழைத்து சம்பாதிக்க வேண்டியதுதானே? என்று உதாசீனப்படுத்தி கடந்து செல்லும் மனிதர்கள்தானே நாம்? வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, வசதியின்றி, புறந்தள்ளப்பட்ட மனிதர்கள்தானே கையேந்தி நிற்கின்றார்கள். பிறந்த குலத்தினால் தாழ்த்தப்பட்டவர்கள் எனப் பிரிக்கப்படும் மக்களின் வாழ்வு ஏற்றம் பெற என்றாவது நாம் உதவி இருக்கின்றோமா?

உணவகங்களில் மீதமாகும் உணவினைச் சேகரித்து ஆதரவற்றோர் இல்லங்களில் கொண்டு சேர்க்கும் இளைஞர்களின் முயற்சியை

பாராட்டுகின்றோமா? அவர்களை ஊக்குவிக்கின்றோமா? உதவும் மனம் படைத்தோரே! நீங்கள் செய்யும் அத்தனைப் பணிக்கும் உரிய கைம்மாறை இறைவன் நிச்சயம் தருவார். அதனாலே சீமோனின் பெயர் இச்சிலுவைப் பாதையில் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

### செபம்

இறைவா! நாங்கள் சந்திக்கும் மனிதர்களில் உமது சாயல் உள்ளது என்பதை உணர்ந்து, உதவி தேவைப்படும் போது கேட்கும் முன்னரே விரைந்து உதவும் நல் மனதைத் தாரும். - ஆமென்

## ஆறாம் நிலை

## இயேசுவின் திருமுகத்தைத் துணியால் துடைக்கிறார்

## பெண்கள் நாட்டின் கண்கள்

### இறைவார்த்தை

திருப்பாடல் 60:12 கடவுளின் துணையால் வீரத்துடன் போரிடுவோம்; அவரே நம் எதிரிகளை மிதித்து விடுவார்.

### சிந்தனை

இன்று நாம் வியர்வை வடிந்தாலே உடனே கைக்குட்டையை எடுத்து துடைக்கின்றோம். இரத்த வியர்வை வியர்த்து, கசையால் வதைக்கப்பட்டு, வழிந்தோடிய இரத்தம் இயேசுவின் ஒளிவீசும் திருமுகத்தை மறைத்துவிட்டது. பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்ட யூத சமூகத்தில், அத்தனை மனிதர்களையும் கடந்து, கடவுளின் முகம் துடைக்க முற்படுகின்றார் வீர மங்கை வெரோணிக்கா. ஆடையைத் தொட்ட பெண்ணுக்கு உடனே நலம் அளித்த இயேசு, தன் முகம் துடைத்த வெரோணிக்காவின் துணியில் தன் திருமுகச் சாயலைப் பதிக்கின்றார்.

அன்றைய வீரமங்கை வெரோணிக்காவைப் போல நம் குடும்பத்திலும் சமூகத்திலும் எத்தனையோ பெண்கள் பெண்ணடிமைத்தனத்தை தகர்த்தெறிந்து, சாதிக்கப் புறப்படுகின்றனர். பல்வேறு துறைகளில் சாதித்துக் கொண்டும் இருக்கின்றனர். ஆனால் இன்றும் பெண்களுக்கு எதிரான அநீதிகள் நடந்து கொண்டே தான் இருக்கின்றது. பாலியல் வன்முறை, கற்பழிப்பு, வன்கொடுமை, வரதட்சணை போன்ற பல்வேறு வகைகளில் பெண்கள் துன்புறுத்தப்பட்டு கொண்டே இருக்கின்றனர்.

திறமைகளுக்கு மதிப்பில்லாது, வேலைவாய்ப்புகள் விலை பேசப்படுகின்றது. கல்வித் தகுதி வெறும் காகித அளவிலேயே கருதப்படுகின்றது. சமூக ஊடகங்களிலும் செய்தித்தாள்களிலும் பெண்மை பலவிதங்களில் இழிவுபடுத்தப்படுகின்றது. தடைகளைத் தகர்த்து, வெளியே வரும் பெண்களுக்கு தாறுமாறான பெயர்கள் பரிசாக கிடைக்கின்றது. பெண்கள் தின வாழ்த்துக்களில் மட்டும் பெண்மை போற்றப்படாது, நடைமுறை வாழ்க்கையில், நம்மோடு வாழும் பெண்களை மதித்துப் போற்றுவோம்.

### செபம்

இறைவா! பெண்கள் நாட்டின் கண்கள் என்பதை உணர்ந்து, எம்மோடு வாழும் பெண்களை மதித்துப் போற்ற வரம் தாரும் ஆமென்

## ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

## ஆன்மீக வீழ்ச்சி ஆன்மாவிற்கு அழகு அல்ல!

### இறைவார்த்தை

திருவெளிப்பாடு 2:5 நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்து விட்டாய் என்பதை நினைத்துப்பார்; மனம்மாறு.

## சிந்தனை

தள்ளாடி நடந்த கால்கள் வலுவிழந்து போகின்றன. தடுமாறி இரண்டாம் முறை கீழே விழுகிறார் இயேசு. தடுமாறி விழுந்தாலும் தடம் மாறிப் போகவில்லை. தடம் பதிக்க துணிந்து எழுகின்றார். தந்தையின் திருவுளம் நிறைவேற்ற தாகம் கொண்டவராய், தன்னம்பிக்கையோடு தொடர்ந்து பயணிக்கிறார்.

அன்புள்ள இளையோரே! நம்முடைய ஆன்மீக வாழ்வைப் பற்றி சற்றே சிந்தித்துப் பார்ப்போமா? பெற்றோரே! உங்கள் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வை முறைப்படுத்த நீங்கள் என்ன முயற்சிகள் எடுக்கிறீர்கள்? ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குக் கூட அழைத்து வராமல், சிறப்பு வகுப்புகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கும் உங்கள் பிள்ளைகளின் ஆன்மாவை எவ்விதம் காக்கப் போகின்றீர்கள்?

திருமுழுக்கு, முதல் நற்கருணை போன்ற திருவருட்சாதனங்களை ஆடம்பரமான விழாவாக கொண்டாடி விட்டு, கடமை முடிந்தது என்று கடந்து செல்வது சரியாகுமா? ஆண்டுக்கு சில முறை என வரையறை வகுத்து ஆலயத்துக்கு வருபவர்களின் ஆன்மீக வாழ்வு தழைத்து ஓங்குமா?

ஆடம்பரமான கொண்டாட்டங்களுக்கும் திருவிழாக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து ஆன்ம வாழ்வில் வீழ்ந்து கிடக்கும் நாம் எழுவது எப்போது? சிலுவையினால் தளர்ந்து, தடுமாறிப் போன இயேசு துணிந்து எழுந்து நடக்கிறார். நாம் நம் ஆன்மீக வாழ்வில் எழுவது எப்போது?

ஆண்டவருக்கு முன்னுரிமை கொடுக்காமல், அற்ப காரியங்களில் கவனம் செலுத்தும் நம் ஆன்மா கறைகளோடே மங்கிப் போகும். அழகுபடுத்த ஆவல் கொள்வோமா?

## செபம்

இறைவா! அழியாத ஆன்மாவை கறைகளும் குறைகளுமின்றி உம்மிடத்தில் சேர்க்க, எங்களது ஆன்ம வாழ்வைச் செம்மைப்படுத்த வரமருளும். - ஆமென்

## எட்டாம் நிலை

## இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

## ஆறுதல் மொழிகள் அத்தியாவசியமானதே!

### இறைவார்த்தை

சீராக் 7:35 நோயாளிகளைச் சந்திக்கத் தயங்காதே; இத்தகைய செயல் மற்றவர்களின் அன்பினை உனக்குப் பெற்றுத் தரும்.

### சிந்தனை

சிலுவை சுமந்து செல்லும் இயேசுவின் நிலையைக் கண்டு அழுது புலம்புகின்றனர் எருசலேம் பெண்கள். "எனக்காக அழ வேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று ஆறுதலான வார்த்தைகளை மொழிகின்றார் இயேசு. பாடுகளின் துயரத்திலும் எருசலேம் மகளிருக்கு இயேசு சொன்ன ஆறுதல் மொழிகள் இயேசுவின் உள்ளார்ந்த அன்பினை அவர்களுக்கு வெளிப்படுத்தியது.

நாம் வாழும் இந்த சமூகத்தில் நோயினாலும், ஏழ்மையினாலும் அவதியுறும் மக்களைக் காண்கின்றோம். இது அவர்களின் தலையெழுத்து என்று மிக எளிமையாகச் சொல்லி விட்டு கடந்து செல்கிறோம். கண்டறிய முடியா நோயினாலும் மறுக்க முடியாத வறுமையினாலும் அல்லலுறும் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்திக்க தயாராக இருக்கின்றோமா? சந்திப்பின் மூலம் சொல்லப்படும் ஆறுதலான வார்த்தைகள் அசாத்தியமான மாற்றத்தை அவர்களிடையே ஏற்படுத்தும். வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் ஏழை குழந்தைகளுக்கு சிறந்த கல்வி பெற நாம் கொடுக்கும் ஒத்துழைப்பு உயர்வானது. மருத்துவமனைகளில்

நோயினால் துவண்டு இருக்கும் உள்ளங்களைச் சந்தித்து. ஆறுதல் மொழி நல்குவதை விடுத்து, நம் சுய புராணங்களையும், தேவையில்லாத கதைகளையும் பேசி, இரணத்தின் வேதனையை அதிகமாக்குவது என்ன சுகத்தைக் கொடுக்க போகின்றது? அன்பினை வெளிப்படுத்தும் ஆறுதல் மொழிகளோடு அன்பிற்காக ஏங்குபவர்களை அரவணைப்போம். இறை இயேசுவின் அன்பின் அரசாட்சியை நிறுவும்படி துன்பத்தில் துவண்டு போனவர்களுக்கு தோள் கொடுப்போம்.

### செபம்

ஆறுதலின் தெய்வமே! அமைதியின்றி தவிக்கும் உள்ளங்களில் அமைதியை ஏற்படுத்த, ஆறுதல் மொழிகளைப் பேசும் படி எங்கள் இதயத்தை திறந்தருளும். - ஆமென்

## ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார்

## சிற்றின்பங்கள் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கும்

### இறைவார்த்தை

லூக்கா 8:15 நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ, சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து, மன உறுதியுடன் பலன் தருகிறவர்களைக் குறிக்கும்.

### சிந்தனை

பயணத்தில் மீண்டும் ஒரு வீழ்ச்சி. மூன்றாம் முறையாய் தரையை முத்தமிடுகின்றார் இயேசு. விழுந்தாலும் இலட்சியத்தை நோக்கி நடைபோகின்றார். ஒரு அடிகூட எடுத்து வைக்க இயலாமலேயே பாதங்கள் தடுமாறி விழுகின்றார். காயங்களில் இருந்து இரத்தம் கொட்டி, வலிமை இழந்து, சோர்வினால் தடுமாறி

விழுகின்றார். படைவீரர்களின் கரங்கள் இரக்கத்தோடு கை கொடுக்காமல், கசையடிகளால் இயேசுவை எழுப்பவே முயல்கின்றது.

உலக சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடக்கும் இளைய சமுதாயமே! நாம் எழுவது எப்போது? நாளின் பல மணி நேரங்களை சமூக வலைத்தளங்களில் வீணடிக்கின்றோம். அருகில் இருக்கும் பெற்றோரை மறந்து, முகம் தெரியாத உறவுகளோடு பல மணி நேரமாகப் பேசுகின்றோம். மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமையை விளைவிக்கும் என்பது நாம் அறியாத ஒன்றா?

வாரத்திற்கு ஒரு முறையாகிலும் ஞாயிறு கடன் திருப்பலியில் பங்கெடுக்க முடியாத அளவுக்கு, கடவுள் வழிபாட்டை புறக்கணிப்பவர்கள் திரைக்குப் பின்னால் அடிக்கும் கதாநாயகன்களைக் கடவுளாகப் பாவித்து வழிபடும் நாயக வழிபாடு சரியான ஒன்றா? திருவிவிலியம் கற்றுத் தராததையா உங்களுக்கு திரைப்படம் கற்றுத்தர போகின்றது? திரைப்படங்களைப் பார்த்து அதை வாழ்வாக்க முயன்று, படிக்க வேண்டிய பள்ளிப் பருவத்தில் வரும் எதிர்பாலின ஈர்ப்புகளைக் காதல் என்று எண்ணி, அதன்மூலம் எத்தனை பேரின் வாழ்க்கை சீரழிவுக்கு உள்ளாகின்றது என்பதை தினந்தோறும் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்?

வாழ்க்கையை சின்னாபின்னமாக்கும் இந்த காரியங்களில் விழுந்துகிடக்கும் நாம் எப்போது மட்டுமே பிரகாசிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து வள்ளுவரின் கரம்பற்றி எழுந்து பயணிப்போம்.

### செபம்

இறைவா! உலக சிற்றின்ப நாட்டங்களில் விழுந்து கிடக்கும் எம் இளையோருக்கு நல் வழிகாட்டியாய் இருந்து அருள் புரியும். - ஆமென்

## பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகளைக் களைகின்றார்கள்

### கலாச்சாரத்தினால் கண்ணியம் குறைந்து போகின்றதோ

## இறைவார்த்தை

சீராக் 11:4 நீ அணிந்திருக்கும் ஆடைகுறித்துப் பெருமை பாராட்டாதே; நீ புகழ்பெறும் நாளில் உன்னையே உயர்த்திக்கொள்ளாதே.

## சிந்தனை

கொடூரக் குற்றம் புரிந்தவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை சிலுவைச் சாவு. இங்கு குற்றமில்லா இயேசுவுக்கு வழங்கப்பட்டது. அவமானத்தின் சின்னமாய் கருதப்பட்ட சிலுவையை இவ்வளவு தூரம் சுமந்து வந்த இயேசு தன்மானத்தையும் இழந்து, உடைகளை களையப்படுகின்றார். இரத்தக் கறைகளால் இயேசுவின் உடலில் ஒட்டிப் போன அந்த ஆடையை மிக மெதுவாகவே ஆடையில் மட்டும் கிழிசல் ஏற்படாமல் பதமாக தோலோடு ஒட்டி இருந்த ஆடையை உரித்து எடுக்கின்றனர். இரணத்தின் வலியால் துடிக்கும் இயேசுவைக் கண்டு மகிழ்கின்றார்கள் பரிகாசக்காரர்கள்.

சாலையோரங்களில் ஆடையின்றிக் கிடக்கும் மனநலம் குன்றியவர்களையும், வறியவர்களையும் இழிவாக நோக்கிக் கடந்து செல்லும் நாம் வணிக வளாகங்களிலும் ஆடையகங்களிலும் புதிய இரகம் என்று விற்பனை செய்யும் கிழிந்த, கந்தலான ஆடைகளை அதிக விலை கொடுத்து வாங்கி, பெருமை பேசி கம்பீரமாக நடந்து செல்வது அழகா? அங்கங்களை மறைக்க ஆடை என்பதை மறந்து, ஆடம்பரத்தை மற்றவர்களுக்கு வெளிக்காட்டவே ஆடை என்றாகிவிட்டது. உங்கள் பார்வையைச் சரிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆணவமாக பேசிவிட்டு, அரைகுறை ஆடைகளை அணிபவர்கள் திருந்துவது எப்போது?

அடிப்படை தேவைகளில் ஒன்றான உடுக்க உடை இன்றித் தவிக்கும் மனிதர்களின் தேவையை நிவர்த்தி செய்ய என்றாவது நாம் முற்பட்டு இருக்கின்றோமா? அல்லது அலமாரியை ஆடைகளால் நிரப்புவதிலேயே முனைந்து செயல்பட்டு இருக்கின்றோமா? சிந்திப்போம்.

## செபம்

இறைவா! ஆடைகளின் அவசியம் அறிந்து, கலாச்சாரச் சீரழிவுகளில் சிக்கி, எங்கள் கண்ணியத்தைக் குறைத்து, மற்றவர்களின் பார்வையைத் திசை திருப்பும் மனிதர்களாக நாங்கள் இருந்து விடாமல் இருக்க அருள்தாரும். - ஆமென்

## பதினொன்றாம் நிலை

## இயேசுவைச் சிலுவையில் அறைகின்றார்கள்

## கீழ்ப்படிதலே மாட்சி

### இறைவார்த்தை

பிலிப்பியர் 2:8 சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.

### சிந்தனை

கொல்கொதா மலை உச்சியில் இயேசு சுமந்து வந்த சிலுவையில் இயேசுவின் உடல் மூன்று ஆணிகளால் அறையப்படுகின்றது. இறை அன்பு மற்றும் பிறர் அன்பின் அடையாளமாக சிலுவைச் சட்டங்களை செங்குத்தாக மற்றும் கிடைமட்டமாக வைத்து இயேசுவின் உடலை ஆணிகளால் அறைகிறார்கள். கீழ்ப்படிதலின் அடையாளமாக ஆணிகளால் அறையப்படும் போதும் கூட வலியைக் கதறல்கள் வழியாக மட்டுமே வெளிப்படுத்துகின்றார். எனக்கு ஏன் இந்நிலை? என்று புலம்பவில்லை.

இன்றைய காலச் சூழ்நிலையில் பெற்றோர் மற்றும் பெரியவர்களிடத்தில் கீழ்ப்படிதல் இன்றி, நம்முடைய நல்வாழ்வுக்காக அவர்கள் உரைக்கும் வார்த்தைகளைப் புறக்கணித்து, ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றோமே. மனம் வருந்தி திருந்துவோமா? அறிவுரைகளைப் புறக்கணித்து, தவறு செய்து மாட்டிக் கொள்ளும் நாளில் புலம்புவது பலனைத் தருமா? அரை மணி நேர ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்குப் பிள்ளைகளை அனுப்பாமல், திருப்பலி முடிந்ததும்

தன்னுடனே அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், பின்னர் வரும் நாள்களில் பிள்ளை வழிதவறிப் போகும் போது கண்ணீர் விடுவது எந்த விதத்தில் நியாயமாகும்? கடவுளிடம் ஞானம் கேட்டு மன்றாடு என்று அறிவுறுத்துவதை விடுத்து, தேர்வில் முதல் மதிப்பெண் பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளப் பயிற்றுவிப்பதனால் என்ன மகுடம் கிடைத்து விடப்போகிறது? இறை அச்சமே ஞானத்தின் தொடக்கம். தெய்வ பயமின்றி உலக காரியங்களில் மட்டும் ஈடுபாடு காட்டி வளர்க்கப்படும் குழந்தை எதிர்காலத்தில் கொடுக்கும் பலன் விதைத்த உங்களுக்கே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

### செபம்

இறைவா! நாங்கள் மூத்தோரின் சொற்களுக்குக் கீழ்ப்படிந்து, வாழ்நாளெல்லாம் உம் பிள்ளைகளாய் வாழ வரம் அருளும். - ஆமென்

## பன்னிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்

## கிறிஸ்தவ மதிப்பீடுகள் வாழ்வாக்கப்படுமா?

### இறைவார்த்தை

லூக்கா 9:23 என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.

### சிந்தனை

மூன்று ஆணிகளின் பிடியில் சிலுவையில் தொங்கும் இறைமகனின் உயிர் பிரிகின்றது. மகனுக்கு உரிய கடமையை தாய்க்குச் செய்யும் பொருட்டு அன்புச் சீடரிடம் தன் தாயை ஒப்படைக்கின்றார் இயேசு. திருவுளம் நிறைவேற்ற தாகம் கொண்டவரின் உள்ளம் இங்கு அமைதி அடைகின்றது. எல்லாம் நிறைவேறிற்று

என்று சொல்லி தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார். தன்னலம் துறந்து, சிலுவைச் சாவுக்குத் தம்மையே கையளித்து நிலை வாழ்வை நமக்கு கொடுத்தார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை சற்றே சீர்தூக்கிப் பார்ப்போமா? பிறர் நலம் துறந்து அடுத்தவர்களின் தோள்மேல் சிலுவையைச் சுமத்தி நாம் யாரை பின்பற்றுகின்றோம்? தன்னலத்தை மட்டுமே தலையில் தூக்கிக்கொண்டு எங்கே நாம் பயணிக்கின்றோம்? நம்மையே நாம் தாழ்த்தினால் மட்டுமே உயர்த்தப்படுவோம். வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் திருவிழாவிற்காக சில லட்சங்கள் செலவு செய்து உயர்த்தப்படும் கொடி மரங்கள் கிறிஸ்து உயர்த்திய சிலுவை மரத்தைப் போல மீட்பைக் கொண்டு வருமா? ஆணவ ஆடம்பரத்திற்காக மட்டுமே உயர்த்தப்படும் கொடி மரங்கள் பிற சமயத்தினர் மத்தியில் நம்மைக் கிறிஸ்து அவர்கள் என எடுத்துக்காட்டுமா? கடவுள் உங்களை வளமாக வைத்திருக்கிறார் என்றால் எளியவர்களுக்கு, வறியவர்களுக்கு உதவி செய்து அவர்களின் வாழ்க்கை ஏற்றம் பெறச் செய்வதன் மூலம் உங்களது கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிக்காட்டுங்கள். ஆடம்பரச் செலவுகள் ஒருநாளும் எளிமையை வெளிப்படுத்தாது. எளிமையாய் பிறந்து தன்னலம் துறந்த ஆலமரமாகிய இயேசுவின் விழுதுகள் நாங்கள் என்பதை உலகறியச் செய்வோம்.

### செபம்

இறைவா! நீர் எமக்கு கற்பித்த கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்வாக்க வரம் தாரும். - ஆமென்

## பதிமூன்றாம் நிலை

## இயேசுவின் உடல் அவரது தாயின் மடியில் வைக்கப்படுகின்றது

## தாயின் மடிதான் உலகம்

### இறைவார்த்தை

திருப்பாடல் 131:2 என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது; தாய்மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது.

## சிந்தனை

தாயின் மடியில் சேயின் உடல் வைக்கப்படுகின்றது. பிறக்கும்போது குழந்தையாக கையில் தாங்கிய அன்னை, இன்று இரத்தக் கறைகளோடு, காயங்கள் நிறைந்த உடலை, உள்ளத்தின் ஊடுருவிய வாளின் இரணத்தோடு தாங்குகின்றாள். சோகம் நிறைந்த கண்களிலும், தன் மகன் இறை திட்டத்தை நிறைவேற்றிய மகிழ்ச்சி மிளிர்கின்றது. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று பணிந்த அன்னையின் சிரம் இன்று எல்லாம் நிறைவேறிற்று என்று தலை சாய்த்து மகனை நோக்கி பணிகின்றது.

இறைவனுக்குப் பணிந்து அவர் பிள்ளையாக வாழ்வதில் வரும் நிறைவும் அமைதியும் வேறு எதன் மூலமாகவும் கிடைக்காது என்பதே உண்மை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று மழலை கல்வியிலேயே கற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஏட்டளவிலேயே நின்றுபோகும் கல்வியினால் என்ன பயன்? உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்று முதல் நற்கருணை பெறுவதற்காக மட்டுமே மனப்பாடம் செய்யப்பட்ட பத்துக் கட்டளைகளினால் மட்டும் வாழ்வு சிறந்துவிட போகின்றதா? கேட்ட வார்த்தையை, கற்ற பாடத்தை வாழ்வாக்குவதன் மூலம் மட்டுமே நூறு மடங்கு பலனைக் கொடுக்க முடியும்.

இளையோரே! பெற்றோரின் வார்த்தைக்குச் செவிமடுங்கள். அவர்களது கட்டளைகளுக்குப் பணிந்து இருங்கள். அடக்கமின்றி, ஆணவத்தோடு நம் பெற்றோரிடம் நடந்து கொள்வது அழகா? கருவில் சுமந்த தாயையும் தோளில் சுமந்த தந்தையையும் உயர்வாக மதித்துப் போற்றுங்கள். இதயத்தில் இறைவன் எழுந்தருள்வார்.

## செபம்

இறைவா! நீர் உம் பெற்றோருக்குப் பணிந்து, வளர வளர ஞானத்தில் வளர்ந்தது போல, நாங்களும் எங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, நன்மக்களாக வாழ வரமருளும். - ஆமென்

## பதினான்காம் நிலை

## இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றது

## மடிந்தால் மட்டுமே பலன் அளிக்க முடியும்

### இறைவார்த்தை

நீதிமொழிகள் 10:19 மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்; தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர்.

### சிந்தனை

மாபரனின் உடல் மாற்றானின் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகின்றது. இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்த யோசேப்பு துணிந்து சென்று பிலாத்துவிடம் அனுமதி பெற்று நறுமணப் பொருள்களுடன் இயேசுவை உடலை அடக்கம் செய்கின்றார். இயேசு அடக்கப்படவில்லை; விதைக்கப்படுகின்றார். இறையரசை இம்மண்ணுலகில் தளிர்க்கச் செய்ய விதையாகின்றார் இயேசு.

நாம் எதனை அடக்கம் செய்யப் போகின்றோம்? சற்றே சிந்திப்போமா? நம் சுயநல விருப்பு, வெறுப்புகளை அடக்கம் செய்யும் போது பிறர் அன்பு நம்மில் துளிர் விடுகின்றது. நாவை அடக்கும் போது விவேகம் துளிர்விடுகின்றது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளை மட்டுமே காரணம் காட்டி, நாம் பேசும் வார்த்தைகள் ஆறாத வடுவாய் இரணத்தையே கேட்பவரின் மனத்தில் ஏற்படுத்தி விடுகின்றது. வார்த்தைகளால் உறவுகளை அடக்கம் செய்யாமல் உறவுகளை வளர்த்தெடுப்போம்.

இளையோரே! இன்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும்; பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும் என்ற திருவிவிலிய வார்த்தைகளை மனதில் பதித்துக்

கொள்ளுங்கள். இறை வார்த்தையே ஆன்மீக வாழ்வின் ஊற்று என்பதை உணர்ந்து, இறைவார்த்தையை வாசியுங்கள். வாசிக்கும் வார்த்தைகளை வாழ்வாக்க முற்படுங்கள். தன்னையே உணவாகக் கையளிக்கும் இறைமகனின் திருப்பந்தியில் தகுதியுடன் பங்கு கொள்ள ஆசை கொள்ளுங்கள். பெற்றோரையும் பெரியோரையும் மதித்து, அவர்களின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் தீமைகள் அடக்கப்பட்டு வாழ்க்கை வசந்தமாகும்.

## செபம்

இறைவா! கேட்ட வார்த்தைகளை உள்ளத்தில் இருத்தி, வாழ்வாக்கி இறுதி மூச்சு வரை இறைவன் உம் பிள்ளைகளாகவே நாங்கள் வாழ வரம் தாரும். - ஆமென்

- எழுத்து: செல்வி. அமலி பாத்திமா சேவியர், பாவூர்சத்திரம்.